## முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

# திண்டுக்கல் கலைஞர் மாளிகையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டக் கழகச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள்!





திண்டுக்கல், ஆக.6-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு, அரசியல் களம், சட்டமன்ற ஜனநாயகம் ஆகிய அனைத்திலும் மகத்தான சாதனைகள் படைத்து பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு மக்கள் நினைவில் என்றும் நிலைகொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் 5 முறை முதலமைச்சராகவும் இருந்தவர். அவரது வழியில் தந்தை பெரியார் அவர்களுடைய சமூக நீதி கொள்கைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவம் கொடுத்தவரும், நமது கழக ஆட்சியில் தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றியவருமான கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 07.08.2026, வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில், திண்டுக்கல், கலைஞர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிக ள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் முத்தமிழின் முகவரியாக, புகழ்ச் சின்னமாக ஒளிவீசும் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளினையொட்டி 07.08.2026, வெள்ளிக்கிழமை அன்று திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்கள், வார்டு மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி. ஐ.பி. செந்தில்குமார் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# காவிரிப் படுகையில் காவிய மழை!



அந்த மழைத் துளிகள் கழகத்தின் இளந்தலைவருக்கு வானம் தூவிய வாழ்த்துப் பூக்கள்.

அவருக்கு சற்றும் தொடர்பில்லாத ஒரு வார்த்தையைப் பிடித்துத் தொங்கி வழக்குப் போட்ட த.வெ.க அரசின் மீதும் வக்காலத்து வாங்கிய ஊடகநடுநிலை (அ) யோக்கியர்களின் மீதும் இயற்கைத் துப்பிய எச்சில்.

திராவிட இயக்கத்தின் மீது திட்டமிட்டு பூசப்படும் களங்கச் சேற்றை மீண்டும் ஒரு முறை சட்டப்பூர்வமாகக் கழுவக்கூடிய வாய்ப்பைத் தந்திருக்கிறது அந்த மழை.

கலைஞரின் அரசியல் களமான தஞ்சை மண்ணில் தன்னை இயக்கத்தின் நம்பிக்கைக்குரிய தலைவர் என மெய்ப்பித்திருக்கிறார் இளம் தலைவர். அவரை உச்சிமோந்து பாராட்டியிருக்கிறது அந்த மழை.

ஆட்சியில் இல்லாவிட்டாலும், ஆட்சியில் இருந்தபோது எந்தப் பலனும் கிடைக்காமல் போனாலும் அது பற்றியெல்லாம் துளியும் கவலையின்றி, தங்கள் உடம்பில் ஓடுவது கருப்புசிவப்பு ரத்தம் என்பதை தமிழ்நாடு முழுவதும் உணர்வுப்பூர்வமாகக் காட்டிய தி.மு.க. உடன்பிறப்புகள் முதன்மையான நன்றிக்குரியவர்கள். அவர்கள் அனைவருக்கும் இயற்கையின் முத்த மழை.

அடுத்த நன்றி, தி.மு.க.வின் கெத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் வெளிப்படுத்தும் வாய்ப்புக்கு காரணமான விஜய் அரசுக்கு! அதன் ஆணவத்தை வழித்துத் துடைத்து காவிரியில் சேர்க்கட்டும் அந்த மழை!

**கோவி.லெனின்**
கழக ஆலோசகர்,
தகவல் தொழில்நுட்ப அணி

## முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆவது ஆண்டு நினைவு நாள்!

# தூத்துக்குடி தெற்கில் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துவீர்!

### மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தூத்துக்குடி, ஆக.6-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை அரை நூற்றாண்டு காலம் சிறப்புடன் நிறைவேற்றியவர். 5 முறை 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்புவகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று மறைவெய்தினர்.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வித்தகராக திகழ்ந்த தமிழ் தாயின் தலைமகன், தமிழ் மொழியை, தமிழர்களை தன் உயிராய் நேசித்தவர், தமிழ் மண்ணில் சமூக நீதியை நிலைநாட்ட விடாப்பிடியாக போராடி வெற்றி கண்டவர், உயர் கல்வியை வளர்த்தெடுக்க அயராது உழைத்து முத்திரை பதித்தவர் தமிழர்களின் இதயங்களில் வாழ்ந்து வருபவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

கலைஞரின் செயல்பாட்டு சிறப்பினை பின்பற்றி தமிழக மக்களுக்காக தொடர்ச்சியாக செயலாற்றி வரும் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் அமைதிப் பேரணி ஆகஸ்ட் 7 அன்று நடைபெற உள்ளது. அன்றைய தினம் மாவட்டக் கழகத்தின் சார்பாக திருச்செந்தூர் ஆடுயு அலுவலகம் அருகில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு புகழஞ்சலி செலுத்தப்படும். அதே போன்று கழக ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழக அலுவலகங்கள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் கலைஞர் திருவுருவப் படத்தை அலங்கரித்து புகழஞ்சலி செலுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள புகழஞ்சலி நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 7ஆம் தேதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு தினத்தை முன்னிட்டு

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் அமைதிப் பேரணி!

### மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அழைப்பு!



மதுரை, ஆக.6-

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகிற 7ஆம் தேதி வண்டியூர் ரிங் ரோடு அருகிலிருந்து அமைதி பேரணியாக சென்று டோல் கேட் அருகே மஸ்தான்பட்டியில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளதாகவும், இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்,

அதன்விபரம்

தமிழே உயிராக, தமிழர் வாழ்வே மூச்சாக, தமிழ்நாட்டின் உயர்வே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற ஏழாம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மதுரை வண்டியூர் ரிங் ரோடு பகுதியிலிருந்து மாபெரும் அமைதிப் பேரணி தொடங்கி டோல் கேட் அருகே மஸ்தான்பட்டியில் அமைந்துள்ள தலைவர் கலைஞரின் திருவுருவ சிலை முன்பாக பேரணி முடிவுற்று, அங்கு அன்னாரது வெங்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.

இந்த மாபெரும் அமைதிப் பேரணி மற்றும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் வடக்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் பங்கேற்று அமைதிப் பேரணியை சிறப்பு செய்து முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றிட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

## மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நினைவு நாள்!

### தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ.அறிக்கை!



மதுரை, ஆக.6-

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகிற 7 ஆம் தேதி திருமங்கலம் கழக அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு

மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாகவும் இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டும் என தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம் எல் ஏ தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய, தமிழினத் தலைவர், முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி வருகிற 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு திருமங்கலத்தில் அமைந்துள்ள மதுரை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அணியின் மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் அமைப்பாளர்கள், தலைவர்கள் துணைத் தலைவர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகள் என அனைவரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் நிகழ்வில் பங்கேற்று அன்னாரின் நினைவை போற்றி அஞ்சலி செலுத்த பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும்,

மேலும் ஒன்றிய நகரப் பகுதி பேரூர் மற்றும் வட்ட வார்டு கிளைக் கழகங்கள் தோறும் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் அவர்களின் சாதனைகளை எடுத்துக் கூறி அன்னாரின் திரு வுருவப்படத்திற்கு கழக நிர்வாகிகள் அனைவரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்துமாறும் தெற்கு மாவட்ட செயலாளர்

சேடபட்டி மு.மணிமாறன் எம் எல் ஏ தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் நிகழ்ச்சி!

### மதுரை மாநகர் மாவட்ட கழகத்தினருக்கு

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி வேண்டுகோள்!



மதுரை, ஆக. 6-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிக்கையில் வருமாறு:

அரசியல் பொதுவாழ்வு கலை இலக்கியம் என தொட்ட அனைத்து துறைகளிலும் வெற்றிகரமான பல சாதனைகள் படைத்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாள் ஆகஸ்ட் 7 வெள்ளிக்கிழமை அன்று காலை 7.45 மணியளவில் தமிழ்ச்சங்கத்தில் இருந்து புறப்பட்டு அமைதிப்பேரணி தமிழ்ச் சங்கம் சாலை வழியாக சிம்மக்கல்லில் அமைந்துள்ள முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் திருவுரு வச்சிலைக்கு காலை 8.00 மணியளவில் மாவட்ட செயலாளர் கோ.தளபதி Ex.MLA., அவர்கள் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டிகிறேன்.

குறிப்பு : வட்ட கழகங்கள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

### மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை!



தஞ்சாவூர், ஆக. 6 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் அருகே உள்ள வலையப்பேட்டை பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்த உள்ளதால் கழக நிர்வாகிகள், முன்னாடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டைக் அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : வருகின்ற 07.08.2026 வெள்ளிக் கிழமை காலை 8.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி தலைமையில் கும்பகோணம், வலையப்பேட்டை பைபாஸ் சாலையில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநில சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதி நிதிகள், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள். முன்னாள் இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## சட்டமன்றம் கூடுகிற நேரத்தில் – சட்டமன்ற

# எதிர்க்கட்சித் தலைவரை அவசர அவசரமாகக் கைது செய்தது நியாயமல்ல!

### கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!



சென்னை, ஆக. 6 -

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரை சட்டமன்றம் கூடுகின்ற இந்த நேரத்தில் அவசர அவசரமாக கைது செய்திருப்பது நியாயமல்ல என்று கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

அவதூறு வழக்குகளைப் போட்டு எதிர்க்கட்சிகளை முடக்க நினைப்பதை அரசு கைவிட வேண்டும். அவதூறு என்று முடிவு செய்கின்ற அதிகாரத்தை நீதிமன்ற த்தின் முடிவுக்கு விட்டுவிட வேண்டும். தமிழக மக்கள் அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்புகளோடு நிதிநிலை அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்ற சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரை முடக்கும் விதமாக இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கக் கூடாது. நீதிமன்றம் சட்டப்படி தக்க நிவாரணத்தை கொடுக்கும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.